Edelweiss
Ideas create, values protect

# மிக முக்கிய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

## ஈடில்வைஸ் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்

| முக்கிய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ____________________ இடையில் ஒப்புக் கொள்ளப்பட்டன: | |
|---|---|
| விண்ணப்பதாரர் | |
| இணை விண்ணப்பதாரர் | |
| இணை விண்ணப்பதாரர் | |
| (இனி இவர்கள் தனித்தனியாக மற்றும்/ அல்லது கூட்டாக ‘கடனாளிகள்’ என்று சொல்லப்படுவார்கள்) | |
| மற்றும் | |
| ஈடில்வைஸ் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட் | |

**மேலேயுள்ள கடன் கணக்குடன் சம்பந்தப்பட்ட மிக முக்கிய வரையறைகள் மற்றும் நிபந்தனைகள் கீழே சுருக்கமாக விவரிக்கப்பட்டிருக்கின்றன.**

**I. கடன் விபரங்கள் -**

| | |
|---|---|
| **கடன் தொகை** | |
| **கடன் பெறும் நோக்கம் (திட்டம்)** | கட்டுமானம் / கொள்முதல் / நீட்டிப்பு / புதுப்பித்தல் / மேம்பாடு / அடமானம் / நிலம் / கலப்பு / வணிக / (வேறு ஏதேனும் இருந்தால் குறிப்பிடவும் ______ |
| **வகை (நிலை அல்லது மிதவை அல்லது இருமம்/** | _________________ ஆண்டுக்கு [நிலையான / மாறும் / இரட்டை - ஆண்டுதோறும் / மாதாந்திரம்] |
| **வட்டி - வசூலிக்கப்படுவது** | _____% ஆண்டுக்கு (_______________________% குறிப்பு வீதம் - ____% வரம்பு) மிதக்கும் வீதக் கடன்களுக்கு; மற்றும் / அல்லது ___% நிலையான விகித கடன்களுக்கு) |
| **காலவரை** | ___________வருடங்கள் |
| **தவணை வகை** | மாதந்தோறும் |
| **தற்கால ஒத்திவைப்பு அல்லது மானியம்** | |
| **வட்டி மீட்டமைப்பு தேதி** | |
| **வட்டி வீதத்தில் நிகழும் மாற்றங்களைத் தெரிவிக்கும் முறை (பொருத்தமான வழிமுறையில் டிக் செய்யவும்)** | வட்டி விகிதத்தின் எந்த மாற்றமும் எஸ்.எம்.எஸ் / மின்னஞ்சல் / கூரியர் அல்லது தற்போதைக்கு நடைமுறையில் உள்ள வேறு எந்த மின்னணு முறை மூலமும் ஈ.எச்.எஃப்.எல் கொடுக்கப்பட்டுள்ள தொடர்பு விவரங்களில் கடன் வாங்குபவருக்கு முறையாகத் தெரிவிக்கப்படும். |

## II. கட்டணங்கள் மற்றும் இதர பிற செலவினங்கள்:

| | |
|---|---|
| **விண்ணபத்தின் போது** | பரிசீலனைக்<br>கட்டணங்கள்: செர்சாய்<br>கட்டணம் : |
| **கடன் ஒப்பளிப்பு / பட்டுவாடா செய்யப்படாவிட்டால் திருப்பப்படும் கட்டணங்கள்** | வாடிக்கையாளர் செலுத்தும் கடன் விண்ணப்பப் பரிசீலனைக் கட்டணம் திருப்பி அளிக்கப்படாது |

பொருந்தக்கூடிய பிற கட்டணங்களின் விவரங்கள் எம்ஐடிசி ஆவணங்களுக்கான இணைப்பாக இணைக்கப்பட்டுள்ளன மற்றும் எங்கள் வலைத்தளத்திலும் புதுப்பிக்கப்பட்டுள்ளன https://www.edelweisshousingfin.com/FeesCharges

மேலே கூறப்பட்டுள்ள கட்டணங்கள் மற்றும் செலவினங்களுடன் கூடுதலாக பொருந்தும் சட்ட விதிகளுடன் இணங்கி அவ்வப்போது விதிக்கப்படும் வரிகள், துணை வரிகள், தீர்வைகள், மேல்வரி ஆகியவையும் வசூலிக்கப்படும். மேலே கூறப்பட்டிருக்கும் கட்டணங்கள் நாளது தேதியிலிருப்பவை, இவை மாற்றங்களுக்கு உள்ளாகும். நிறுவனம் தன் இணையதளத்தில் இதன் புதுப்பிக்கப்பட்ட பதிப்பை அவ்வப்போது வெளியிடும்.

கடன் ஒப்பந்த ஆவணத்தில் வரையறைகள், நிபந்தனைகள், கட்டணங்கள், செலவினங்கள், அகவிலை மற்றும் கேட்புரிமைகள் விபரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

## III. கடன் வசதிக்கு அளிக்கப்படும் பிணையம்

| | |
|---|---|
| **சொத்து முகவரி** | |
| **உத்தரவாதமளிப்பவர் பெயர்** | |
| **வேறு பிணையங்கள்** | |

கடனளிக்கப்பட்ட சொத்து பொதுவாக கடனுக்கான பிணையமாக இருக்கும் அத்துடன்/அல்லது கூடுதல் சொத்து / உத்தரவாதமளிப்பவர் தேவை என்று EHFL நிறுவனம் கேட்டுக்கொள்ளக் கூடும். ஒப்பளிப்பு அளிக்கப்பட்ட கடனுக்கு உரிய பிணைய விபரங்களை கடனாளிகள் கடன் ஒப்பந்த ஆவணத்தைப் படித்துப் பார்த்து தெரிந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

## IV. சொத்து / கடனாளிகளின் காப்பீடு

நிறுவனத்திற்குச் சம்மதமான ஒரு காப்பீடு நிறுவனத்துடன், நிறுவனத்திற்குத் தேவைப்படுவது போல் தீ விபத்து மற்றும் வழக்கமான இதர பிற அபாயங்களுக்கு எதிராக சொத்துக்களைக் கட்டாயம் காப்பீடு செய்து வைத்திருக்க வேண்டும். காப்பீடு பாலிசியில் EHFL நிறுவனம் மட்டுமே பயனாளராகக் குறிப்பிடப்பட வேண்டும்.

**சொத்து காப்பீடு:** ____________________________________________

**கடன் வாங்குபவர்கள் காப்பீடு:** _________________________________

## V. கடன் தொகை பட்டுவாடா குறித்த நிபந்தனைகள்

வீட்டுக் கடன் ஒப்பளிப்பு கடிதத்திலும், கடன் ஒப்பந்த ஆவணத்திலும் குறிப்பிடப்பட்டிருக்கும் நிபந்தனைகளை கடனாளிகள் EHFL நிறுவனம் விரும்பும் வகையிலும் அதற்கு திருப்தி அளிக்கும் வகையிலும் நிறைவேற்றாத வரை கடன் தொகையை அல்லது அதன் கீழ் வழங்க வேண்டிய தவணைகளை EHFL பட்டுவாடா செய்யாது. அவற்றில் சில நிபந்தனைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

a. கடனாளிகள் அவர்கள் கடன் பெறும் அருகதையை EHFL க்குத் திருப்தி அளிக்கும் வகையில் நிரூபிக்க வேண்டும்.
b. ஒப்பளிப்பு / கடன் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் உரிய ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்
c. கடன் ஒப்பந்தம் மற்றும் அது சம்பந்தப்பட்ட துணை ஆவணங்களை உரிய முறையில் நிறைவேற்ற வேண்டும்.
d. கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான முன் தேதியிட்ட காசோலைகள் / ECS போன்றவைகளைச் சமர்ப்பிக்க வேண்டும்.
e. EHFL நிறுவனத்தின் சார்பில் ஆதரவாக பிணையத்தை உருவாக்க வேண்டும்.
f. பிணையமாக வழங்கப்படும் சொத்து மீது கடனாளிக்கு முழு துய்ப்புரிமை உள்ளதையும், அதை விற்கும் தெளிவான பாத்தியதை உள்ளதையும் உறுதி செய்வதோடு, சொத்து மீது எந்த வில்லங்கமும் இல்லை என்றும், அதன் மீது வேறு எந்த கடன்களும் இல்லை என்பதையும் உறுதி செய்ய வேண்டும்.
g. பணி சம்பந்தப்பட்ட / தொடர்பு விபரங்களில் ஏதேனும் மாற்றங்கள் இருந்தால் அதை EHFL க்கு தெரிவிக்க வேண்டும்.
h. பட்டுவாடா செய்யப்படும் தொகையை சொத்து வாங்குவதற்கு / கட்டுமானத்திற்கு அல்லது விண்ணப்பத்தில் குறிப்பிட்டிருக்கும் நோக்கத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். கட்டுமானத்திற்கு வழங்கப்படும் கடன்கள் கட்டுமானம் நிறைவேறும் நிலைக்கு ஏற்ப தொகை பட்டுவாடா செய்யப்படும்.
i. முழு தொகையும் பட்டுவாடா செய்யப்பட்டிருக்காத நிலையில் முன் -EMI -வட்டி வசூலிக்கப்படும்
j. கடனைத் திருப்பிச் செலுத்தும் தவணை ஒருபோதும் தவறக் கூடாது. தவணை தவறுதல் நிகழ்வுகள் கடன் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.
k. கடன் பெறுவதற்காக கடனாளி செய்து கொடுத்திருக்கும் கடன் ஒப்பந்தம் மற்றும் இதர பிற வழக்கமான ஆவணங்களை கடனாளி நிறைவேற்ற இயலாது என்று EHFL நிறுவனம் கருதுவதற்கு ஏதுவான எந்த ஒரு செயலும் நிகழாமல் இருக்க வேண்டும்.
l. பிணையத்தை உருவாக்கும் அடைமானத்திற்காக என்ஓசி/ஒப்புதல் / ஒப்பளிப்புகள்

## VI. கடன் தொகையையும் வட்டியையும் திருப்பிச் செலுத்துதல்

வட்டி வீதம், முன்னதாகச் செலுத்த வேண்டிய மாதாந்திர தவணை வட்டி (PEMII) / மாதாந்திர தவணை (EMI) தவணை எண்ணிக்கை, கடன் வசதிக்கான காலவரை அனைத்தும் கடனாளிக்குக் கொடுத்திருக்கும் ஒப்பளிப்புக் கடிதத்தில் எழுதப்பட்டுள்ளன. EHFL நிறுவனத்திடம் பதிவு செய்யப்பட்டிருக்கும் தொடர்பு முகவரியில் EHFL கடைபிடிக்கும் நன்னெறி நடத்தை விதிகளைப் பின்பற்றி கடனாளிக்கு PEMII / EMI இணக்க வட்டி வீதத்தில் நிகழும் மாற்றங்களை நிறுவனம் தெரிவிக்கும். கடன் ஒப்பந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டிருப்பது போல் கடன் தொகையை குறிப்பிடப்பட்ட EMI / PEMII மூலமாக கெடு தேதியில் செலுத்திவிட வேண்டும்.

இ எம் ஐ/ பி இ எம் ஐ ஐ திருப்பிச் செலுத்துவதற்கு இ எச் எ்ப் எல் க்கு ஆதரவாக இ சி எஸ் / பிந்தைய தேதியிட்ட காசோலைகள் மூலம் கட்டாயப்படுத்தப்படுகிறது

**கடனாளி இவற்றை உறுதி செய்ய வேண்டும்:**

- கடனாளியின் குறிப்பிட்ட வங்கிக் கணக்கில் போதுமான இருப்பு வைத்திருக்க வேண்டும்
- இஎம்ஐ தவணை செலுத்த கொடுத்திருக்கும் காசோலைகளைக் கேன்சல் செய்வது / பணம் செலுத்த தடை போடுவது கூடாது. தவணை தொகை செலுத்த காசோலை வழங்கியிருக்கும் கணக்கை மாற்றுவதோ அல்லது மூடுவதோ கூடாது (கடனைத் திருப்பிச் செலுத்த மாற்று ஏற்பாடு செய்திருப்பதை EHFL ஒப்புக்கொள்ளும் வரையில்).

- உரிய கெடு தேதியில் அல்லது அதற்கு முன்னதாக தவணைகள் செலுத்தப்பட வேண்டும், இல்லாவிட்டால், கடன் நிலுவைத் தொகையும் அதனுடன் சேர்ந்திருக்கும் வட்டியும் உடனடியாகச் செலுத்த வேண்டிய தொகையாகக் கருதப்படும். கட்டணங்கள் அட்டவணையில் காட்டப்பட்டிருக்கும் கட்டணத் தொகைகளையும் கடனாளி செலுத்தக் கடமைப்பட்டவராவார்.
- கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தும் வரையறைகள் மற்றும் நிபந்தனைகள் கடன் ஒப்பந்த ஆவணத்தில் தெளிவாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

**VII. கெடுகடந்த நிலுவைத் தொகையை வசூலிக்கும் நடைமுறைச் சுருக்கம்**

ஒருவேளை தவணை தவறும் பட்சத்தில் (அதாவது, கெடு தேதியில் கடனாளி நிலுவைத் தொகையைத் திருப்பிச் செலுத்த தவறும் போது அல்லது ஒப்பந்த ஷரத்துகளில் ஒன்று பங்கமடையும் போது), கடனாளியில் கடன் கணக்கிலிருக்கும் நிலுவைத் தொகையைத் திருப்பிச் செலுத்தக் கோறி தபால், தொலைநகல், தொலைபேசி, மின்னஞ்சல், எஸ்எம்எஸ் மற்றும் / அல்லது தொகையை வசூல் செய்ய நியமிக்கப்பட்டிருக்கும் மூன்றாம் நபர் மூலமாக நினைவூட்டல், தொடர்புகொள்ளல் மற்றும் வசூல் செய்வதற்கு நிறுவனம் ஆவண ஏற்பாடுகள் செய்யும். வசூல் செய்யும் நடைமுறையில் இவை அடங்கும்:

**a. தொலைபேசியில் தொடர்பு கொள்ளுதல் மற்றும் பெற்றுக்கொள்ளுதல்** கடனாளியுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தொகை செலுத்தும் கெடு தேதி கடந்து விட்டதை நினைவு படுத்துதலும், நிலுவைத் தொகையைக் கூடிய சீக்கிரம் செலுத்திவிட கோரிக்கை செய்தலும் அடங்கும்.

**b. கடனாளி இடத்திலிருந்து வசூலித்தல்** கடனாளியை நேருக்கு நேர் சந்தித்து பாக்கித் தொகையை வசூலித்தல் இதில் அடங்கும் EHFL பணியாளர்கள் அல்லது அங்கீகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலமாக இது மேற்கொள்ளப்படும். இவ்வாறு வசூலிக்கப்படும் தொகை ரொக்கமாக அல்லது காசோலை / கேட்பு வரையோலையாக இருக்கலாம், தொகை பெற்றுக்கொண்டதற்கு கடனாளிக்கு ரசீது வழங்கப்படும்.

**c. சட்ட நடவடிக்கை**எடுக்க வேண்டிய சந்தர்ப்பங்களில் கெடுதவறிய கணக்குகளின் தன்மையைப் பொருத்தும் EHFL நிறுவனத்தின் கொள்கையை அனுசரித்தும் பொருந்தும் சட்ட விதிகளுக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

இதன் பொருட்டு, கடனாளி இருப்பிடத்தில் அவரைச் சந்தித்தல், எழுத்து மூலமாக கோரிக்கை எழுப்புதல், சட்ட நடவடிக்கை ஆகியவை முறையான சிந்தனை அடிப்படையில் மேற்கொள்ளப்படும் என்பதுடன் கெடு தவறிய கணக்குகள் ஒவ்வொன்றின் தன்மையைப் பொருத்து மேற்சொன்ன நடவடிக்கைகள் ஒன்று அல்லது பலவும் என மேற்கொள்ளப்படும்.

**VIII.** வருடாந்திர நிலுவை தொகை இருப்பு அறிக்கை அனுப்பப்படும் தேதி: வாடிக்கையாளர் கோரிக்கை அடிப்படையில்

**IX. வாடிக்கையாளர் சேவைகள்**

**A) பார்வையிடும் நேரம்** - கிளைகள்: 10AM - 5 PM, திங்கள்-வெள்ளி (பொது விடுமுறை நாட்கள் தவிர)

**B) ஆவணங்கள் கோரிக்கை உட்பட்ட சேவை சம்பந்தப்பட்ட அனைத்து பிரச்சனைகளுக்கும், கடனாளி EHFL நிறுவனத்துடன் இதன் மூலம் தொடர்பு கொள்ளலாம்:**

(i) மின்னஞ்சல் முகவரி homeervice@edelweissfin.com
(ii) எங்களை தொடர்பு கொள்ள 1-800-1026371 (கட்டணமில்லாது) திங்கள் முதல் வெள்ளி வரை 10 A.M TO 5 P.M.
(iii) இணைய உள்நுழைவு மூலம் www.edelweisshousingfin.com

**C) கீழேயுள்ள ஆவணங்களை வழங்கும் நேரக் கட்டுப்பாடு:**

(i) கடன் கணக்கு அறிக்கை - 2 வேலை நாட்கள்
(ii) உரிமை ஆவணத்தின் நகல்- 12 வேலை நாட்கள்
(iii) கடனை திருப்பிச் செலுத்தல் அல்லது மாற்றுதலில் அசல் ஆவணங்களைத் திருப்பித் தருதல்-15 வேலை நாட்கள்

Edelweiss
Ideas create, values protect

**IX. குறை தீர்ப்பு**

ஏதேனும் புகார் / குறை இருந்தால், கடன் வாங்குபவர் பின்வரும் ஏதேனும் முறையின் மூலம் எங்கள் நிறுவன அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்:

செல்வி/திருமதி சிவாலி ஷிண்டே
மின்னஞ்சல்: homeservice@edelweissfin.com
தபால்: ஈடில்வைஸ் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட், ஈடில்வைஸ் ஹௌஸ், ஆஃப் சி.எஸ்.டி சாலை, கலினா, மும்பை - 400 098; தொலைபேசி : 022 – 4272 2554/ /
கட்டணமில்லா எண் : 1-800-1026371

விசயத்தைப் பரிசீலித்த பிறகு, கடனாளியிடமிருந்து குறை/குற்றச்சாட்டு கிடைத்த அறு (6) வார காலத்திற்குள் பதிலளிக்க EHFL உரிய முயற்சி எடுத்துக்கொள்ளும்.

வாடிக்கையாளர் நிறுவனத்திடமிருந்து பதிலைப் பெறாவிட்டால் அல்லது பெறப்பட்ட பதிலில் அதிருப்தி அடைந்தால், புகார்தாரர் தனது புகாரை இணையம் மூலம் தேசிய வீட்டுவசதி வங்கியின் புகார் நிவாரண கலத்தை அணுகலாம் http: // grids.nhbonline.org.in அல்லது இணைப்பில் கிடைக்கும் பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தில் அஞ்சல் மூலம் ஆஃப்லைன் பயன்முறையில் http://www.nhb.org.in/Grievance - நிவாரணம் - கணினி / உறைவிடம் - புகார் - எதிராக - எச்.எஃப்.சி கள் என்.எச்.பி% இ 2% 80% 93Physical - Mode.pdf , பின்வரும் முகவரிக்கு:

புகார் நிவாரண மையம், ஒழுங்குமுறை மற்றும் மேற்பார்வைத் துறை, தேசிய வீட்டுவசதி வங்கி, 4 வது மாடி, கோர் -5 ஏ, இந்தியா வாழ்விட மையம், லோதி சாலை, புது தில்லி - 110 003

கடன் ஏற்பாட்டில் சம்பந்தப்பட்ட நபர்கள் கடன் ஒப்பந்தம் மற்றும் நிறைவேற்றப்பட்டிருக்கும் / நிறைவேற்றப்படவிருக்கும் இதர பிற பிணைய ஆவணங்களிலுள்ள விளக்கமான வரையறைகள் மற்றும் நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டிருப்பார்கள் என்று சம்மதம் தெரிவிக்கின்றனர்.

நான் / நாங்கள் கடன் வாங்கியவர்கள் இதன்மூலம் மேற்கூறிய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் என்னால்/எங்களால் எங்களது பிராந்திய மொழியில் படித்தோம்/ திரு / திருமதி. ____________________ நிறுவனத்தின் சார்பாக படித்துக் காட்டப்பட்டோம் என்று ஒப்புதல் அளிக்கிறோம் மேலேயுள்ள வரையறைகள் மற்றும் நிபந்தனைகளை நான்/ நாங்கள் புரிந்து கொண்டு அவைகளுக்குச் சம்மதம் அளிக்கிறோம் என்றும் அவை எங்களைக் கட்டுப்படுத்தும் என்றும் தெரிவித்துக் கொள்கிறோம். மிக முக்கிய வரையறைகள் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய ஆவண நகல் ஒன்றைப் பெற்றுக் கொண்டிருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

| கடனாளி(கள்) பெயர் | ஈடில்வைஸ் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட் |
|---|---|
| கையொப்பம் (கையொப்பங்கள்) | அதிகாரியின் கையொப்பம் |